

■ கோயம்பேடு கூவம் முதல், சந்தை வரையிலான இரண்டாவது தண்டவாளப் பாதைக்கான மின் கம்பங்கள், கேபிள்கள் பொருத்தப்பட்ட பின், அதிகாரிகள் நேற்று, டீசல் இழுவை இன்ஜின் உதவியுடன் ஆய்வு செய்தனர்.

# மெட்ரோ ரயில் பணிமனை அருகே மின்மயமாக்கல் பணி துரிதம்

– நமது நிருபர் –

மெட்ரோ ரயில் பணிமனையில் இருந்து, கோயம்பேடு ரயில் நிலையம் வரை, விடுபட்ட இடத்தில், மின்மயமாக்கும் பணி நேற்று துவங்கியது.

சென்னை மெட்ரோ ரயில் திட்ட பணியில், அசோக்நகர் – ஆலந்துார் இடையேயான வழித்தடத்தில், மின்மயமாக்கும் பணி நடக்கிறது.

அதேநேரம், கோயம்பேடு பணிமனையில் இருந்து, கோயம்பேடு ரயில் நிலையம் வரை, மின்மயமாக்கல் பணி நடைபெறாமல் விடுபட்டு இருந்தது.

நேற்று முதல், விடுபட்ட வழித்தடத்தில் மின்மயமாக்கும் பணி தொடர்ந்து நடந்து வருகிறது. மேலும், கோயம்பேடு ரயில் நிலையம் செல்லும் வழித்தடத்திலும், மின்மயமாக்கும் பணி நடந்து வருகிறது.